කලාප අධ්‍යාපන කාර්යාලය - දෙහිඕවිට
வலயக் கல்விக் காரியாலயம் - தெஹியோவிட்ட
Zonal Education Office - Dehiowita

දෙවන වාර පරීක්ෂණය 2024	ශ්‍රේණිය 7
இரண்டாம் தயனணப் பரீட்சை 2024	தரம் 7
Second Term Test 2024	Grade 7

ගණිතය Mathematics **கணிகம்**	කාලය : පැය 2.00 Time : 2.00 Hours நேரம்: 2.00 மணி

பகுதி I

- **வரையான வினாக்களுக்கு இத்தாளிலேயே விடை எழுதுக**
- **பகுதி ii ல் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01.



சமச்சீர் அச்சை பயன்படுத்தி உருவின் எஞ்சிய பகுதியை பூரணப்படுத்துக.

02. 2 , 5 ஆகிய இலக்கங்களில் ஓர் எண்ணை மாத்திரம் இரு தடவை பாவித்து 9 ஆல் வகுபடும் மூவிலக்க எண் ஒன்றை எழுதுக.

03. ‘‘டொபி’’ பைக்கற்று ஒன்றின் திணிவு 1Kg 125 g ஆகும் அவ்வாறான 8 பைக்கற்றுக்களின் திணிவை காண்க.

04. பெறுமானம் காண்க.

$10 - 2\times3$

05. $x = 3$ எனின் $2x^2$ இன் பெறுமானத்தை காண்க.

06. “tomorrow” என்ற சொல்லின் எழுத்துக்களின் தொடையை எழுதுக.

07.

$$\frac{3}{4} = \frac{75}{\square} = \square\ \%$$

பின்னம், தசமம் தொடர்புகளை பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

08. தரப்பட்ட உரு தொடர்பான சரியான கூற்றுக்கு √ எனவும் பிழையான கூற்றுக்கு X எனவும் அடையாளமிடுக.



குவிவு பல்கோணி ஆவதோடு ஒழுங்கான பல்கோணி ஆகும் ☐

குழிவு பல்கோணி ஆவதோடு ஒழுங்கான பல்கோணி அன்று. ☐

09. கீழ் காணும் வருடங்களில் நெட்டாண்டுகளை தெரிந்து அதன கீழ் கீறிடுக . (i)கி.பி..1948 (ii) கி.பி.1900 (iii) கி.பி 1800 (iv) கி.பி 2022	10. $2\frac{4}{5}$ ஐ முறைமையில்லாப்பின்னமாக காட்டுக.
11. 2l 800ml ÷14 பெறுமானத்தை காண்க.	12. உருவில் காட்டப்படுவது சம பகுதிகளாக பிரிக்கப்பட்ட செவ்வகமாகும்.தரப்பட்ட அளவுகளுக்கமைய நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் காண்க. 
13. தரப்பட்ட கோணங்களுக்கமைய இடைவெளிகளை நிரப்பக  கோணம் xyz இன் உச்சி .... ஆவதடன் அது...................... கோணமாகும். கோணம PQR இன் உச்சி .... ஆவதடன் அது........................ கோணமாகும்.	14.  உருவின் சுற்றளவைக் காண்க.
15. 45 முதன்மை காரணிகள் இரண்டை எழுதுக.	16. 16 ஐ அடி இரண்டின் வலுவாக தருக.
17. $P\hat{Q}R = 75^0$ ஐ பாகைமானியையும் கீழ் காணும் நேர்கோட்டுத் துண்டத்தையும் பயன்படுத்தி அமைக்க. p ________________________ Q	18. "x" ஐ 3 ஆல் பெருக்கி 5 ஐ கழிப்பதற்கான சரியான அட்சர கணித கோவையை எழுதுக.

19. தரப்பட்ட வட்டத்தில் விட்டத்ததை பெயரி 	20. நீளம் 12 Cm ஆகவும் அகலம் 8 Cm ஆகவும் உடைய செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க

பகுதி ii

01. a) i . கீழ் உள்ள அட்டைகளில் எழுதப்பட்டுள்ள அட்சர கணித உறுப்புகள் ,தெரிந்த கணியங்கள், கணித குறியீடுகள் ஆகியவற்றை பயன்படுத்தி இரண்டு சமன்பாடுகளை எழுதுக.

32	P	2P	12	×	+	4	18	-

(பு. 2)

ii. அச்சமன்பாடுகளில் உள்ள அட்சரகணித உறுப்பு , ஒன்றையும் குணகம் ஒன்றையும் எழதுக.

(பு . 2)

b) $3p + 7 = 19$ ஆகவுள்ள சமன்பாட்டின்

i. கணித செய்கை இரண்டை எழுதுக. (பு . 2)

ii. அட்சர கணித உறுப்பு ஒன்றின் குணகத்தை எழுதுக. (பு . 2)

iii. $8p - 4 = 20$ சமன்பாட்டை தீர்க்க (பு . 2)

iv. $5x - 2 = 13$ சமன்பாட்டை பாய்ச்சற் கோட்டு முறையில் தீர்க்க (பு . 2)

c)



தரப்பட்ட செவ்வகத்தின் நீளம் a உம் அகலம் b உம் ஆகும்

i . அதன் சுற்றளவு p எனின் p ற்கான சூத்திரத்தை a , b சார்பில் தருக. (பு . 1)

ii. $a = 12$ cm , $b = 6$ cm எனின் p இன் பெறுமானத்தை காண்க (பு . 1)

02. a)



i. நேர்கோடு AB இருபுடை சமச்சீர் அச்சாக அமையும் வகையில் உருவில் எஞ்சிய பகுதியை பூரணப்படுத்துக. (பு . 1)

ii. உமக்கு கிடைத்த உருவில் இருபுடை சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது? (பு . 1)

b) M = {KELANIWELI என்ற சொல்லில் உள்ள எழுத்துக்கள் }

i. M இன் தொடை மூலகங்களை இரட்டை அடைப்பினுள் எழுதுக. (பு . 2)

ii .



வெண்உருவில் தரப்பட்ட தொடை p ஐ வேறு இரு முறைகளில் தருக.

(பு . 2)

C) i. $16 = 4^{\ldots\ldots}$ $16 = 2^{\ldots\ldots}$ சுட்டிகள் தொடர்பான அறிவை பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக. (பு . 2)

ii. $25y^2$ இன் பெருக்கத்தின் விரிவை எழுதுக. ($25 = 5^2$)

(பு . 2)

iii. $x = 1$, $y = 2$ ஆகும் போது $x^6\ y^3$ இன் பெறுமானத்தை காண்க (பு . 2)

03. a)



மேலே தரப்பட்ட தளவடிவங்களுக்கான ஆங்கில எழுத்துக்களை கீழ்காணும் அட்டவணையில் பொருத்தமான இடங்களில் எழுதி அட்டவணையை நிரப்புக.

	சமபக்க முக்கோணி	இருசமபக்க முக்கோணி	சமனில்பக்க முக்கோணி
கூர்ங்கோண முக்கோணி			
செங்கோண முக்கோணி			
விரிகோண முக்கோணி			

(பு .6)

b) i. நான்கு பக்கங்களை கொண்ட குவிவு பல்கோணி ஒன்றையும் குழிவு பல்கோணி ஒன்றையும் வரைக.

c) i. PQ= 7 cm ஆகும் நேர்கோட்டுத்துண்டம் ஒன்றை வரைக. (பு .1)

$P\hat{Q}R = 80^0$ ஆகவும் QR=5cm ஆகுமாறு நேர்கோட்டுத்துண்டத்தை அமைக்க. (பு .2)

P ,R ஐ இணைக்குக $P\widehat{RQ}$ அளந்து எழுதுக. (பு . 1)

04 a) i. அடைப்பினுள் பொருத்தமான பெறுமானங்களை தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

$\frac{5}{8}$ ஆனது .... களில் 5 ஆகும் ($\frac{1}{2}$, $\frac{1}{8}$, $\frac{1}{5}$) (பு . 1)

ii.  உருவினால் காட்டப்படும் கலப்பு எண்ணை எழுதுக. (பு . 1)

iii. 2.75 இன் பகுதி 100 ஆகும் வகையில் முறைமையில்லா பின்னமாக தருக. (பு . 1)

iv. $\frac{13}{5}$ கலப்பு எண்ணாக காட்டுக. (பு . 1)

v. $1\frac{1}{4} + 1\frac{1}{3}$ சுருக்குக. (பு . 2)

vi. மாலதி தனது சட்டையில் தைப்பதற்காக கொண்ட வந்த $4\frac{1}{3}$ மிற்றர் நீளமான ரிபனில் $1\frac{1}{4}$ மிற்றர் அளவான ரிபன் எஞ்சியது சட்டைக்கு பயன்படுத்திய ரிபனின் அளவை பின்னமாக தருக.

(பு . 2)

vii. $\frac{8}{25}$ தசம எண்ணாக தருக. (பு . 1)

vii. 5.231 × 25 சுருக்குக.

05



11m நிளமான செவ்வக வடிவிலான முற்றம் ஒன்றில் ரோசா பூ மற்றும் மல்லிகை பூ வளர்ப்பதற்காக சம அளவிளான இரண்டு சதுர வடிவ பகுதிகள் ஒதுக்கப்பட்டு அதனை சுற்றி 1cm அகலமான பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

.

a) i. சதுர வடிவ பகுதி ஒன்றின் ஒரு பக்க நீளத்தை காண்க. (பு . 2)
ii. செவ்வக வடிவ முற்றத்தின் அகலத்தை காண்க. (பு . 2)

b) i. ரோசா பூ வளர்க்கப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க. (பு . 2)
ii. செவ்வக வடிவ முற்றத்தின் பரப்பளவைக் காண்க. (பு . 2)
iii. பாதைக்காக ஒதுக்கப்பட்டள்ள பகுதியின் பரப்பளவைக் காண்க.? (பு . 2)

06 a) குறித்த ஒரு நாட்டிற்கு பெறப்படும் தொலைப்பேசி அழைப்பு ஒன்றின் முதலாவது நிமிடத்திற்கு ரூபா 15 அதற்கு அடுத்ததாக அதிகரிக்கும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் ரூபா 7 அறவிடப்படும்.

10 நிமிடத்திற்கு செலவாகும் பணத்தை காண்பதற்கான எண் கோவை ஒன்றை எழுதி சுருக்குக. (பு .2)

b) கீழே எண்கள் தொடர்பாக தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் X எனவும் அடைப்பினுள் எழுதுக.

448 5580 1122 1352

(a) மிக சிறிய எண் 4 ஆல் வகுபடும். ( )

(b) மிக பெரிய எண் 9 ஆல் வகுபடும் . ( )

(c) 1122 ஆனது 6 ஆல் வகுபடும் ( )

(d) இங்கு தரப்பட்ட எல்லா எண்களும் 4 ஆல் வகுபடும் ( ) (பு .4)

c) i. 72 ஐ முதன்மை எண்களின் பெருக்கமாக எழுதுக. (பு .1)

ii. 24 , 36 பொது காரணிகளுள் பெரியதை காண்க. (பு .2)

iii. 15 , 18 இன் பொது மடங்குகளுள் சிறியதை காண்க. (பு .2)

07 a) .



X , Y ஆகிய வட்டங்கள் ஒன்றோறொன்று இணைக்கப்பட்டள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது.

i .வட்டம் X இன் மையத்தை பெயரிடுக.

ii. வட்டம் X இன் ஆரையை பெயரிடுக.

iii. வட்டம் X இன் விட்டத்தை பெயரிடுக (பு .2 ×3)

iv. B, E, C இணைப்பதால் ஒர் சமபக்க முக்கோணி பெறப்படும் என ''ரகு'' கூறுகின்றான் இக்கூற்றை நீர் எற்றக் கொள்கிறீரா? காரணம் தருக.

(பு .2)

- மேலே முக்கோணி CEB இன் சுற்றளவு 15cm எனின்

v. வட்டம் X இன் விட்டத்தின் நீளத்தைக் காண்க. (பு .3)

vi. பக்கங்கள் அடிப்படையில் புள்ளி E,C ,D ஆகியவற்றை இணைப்பதால கிடைப்பது எவ்வகை முக்கோணி ஆகும் (பு .1)

PARCEL NO

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න

කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න